**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாடானை**

**அசல் வழக்கு எண்.148/2023**

PW1– திருமதி.மகேஸ்வரி க/பெ.லேட்.பன்னீர்செல்வம் நாள். 08.07.2025

(1969 ம் ஆண்டில் 44 வது பிரிவின்படி) திரு.J.அந்தோணி ரிஷான்தேவ், பி.பி.ஏ., எல்,எல்., பி.பி.எல் (Hons)., மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவாடானை அவர்கள் முன்னிலையில், மாவட்ட உரிமையியல் நீதிமன்ற Assistant (உதவியாளர்) திரு.அழகர்சாமி என்பவர் சாட்சியிடம் சத்தியபிரமாணம் கோரி அதனடிப்படையில் பதிவு செய்த வாக்குமூலம்.

**குறுக்கு விசாரணை**

1. நான் என்ன பரிகாரம் கேட்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது கணவர் இறந்த பிறகு அவருடைய பென்சன் தொகை எனக்கு கிடைக்கப்பெறவில்லை அதனை கேட்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். எனது கணவர் பணியில் இருக்கும் போது இறந்து போனாரா என்றால் இல்லை, எனது கணவர் விருப்ப ஓய்வு கேட்டு பெற்றுவிட்டார், அதன் பின் தான் இறந்து போனார். எனது கணவர் விருப்ப ஓய்வு பெற்று எத்தனை ஆண்டுகள் கழித்து இறந்து போனார் என்றால் சுமார் 15, 20 ஆண்டுகள் கழித்து இறந்து போனார். எனது கணவர் விருப்ப ஓய்வு பெற்று இறக்கும் வரை பென்சன் பெற்று வந்தாரா என்றால் பெற்று வந்தார்.

2. எனது கணவருடைய Service register ல் அவருடைய nominee ன் பெயர் பேச்சியம்மாள் என இடம் பெற்றுள்ளது என்றால் சரிதான். மேற்படி பேச்சியம்மாள் யார் என்றால் எனது கணவரின் முதல் மனைவி ஆவார். எனது கணவரும் மேற்படி பேச்சியம்மாளும் நீதிமன்றம் மூலம் உரிய விவாகரத்து பெற்றுக் கொண்டார்களா என்றால் இல்லை, ஊரில் வைத்து பேசி விவாகரத்து செய்து கொண்டார்கள். மேற்படி பேச்சியம்மாள் 2 வதாக வேறு நபரை திருமணம் செய்து கொண்டார் மேற்கண்ட விவரங்களை குறிப்பிட்டு தங்களுக்குள் ஒரு விடுதலை பத்திரம் ஏற்படுத்திக் கொண்டார்கள், அது இவ்வழக்கில் வா.சா.ஆ.1 ஆக குறியிடு செய்யப்பட்டுள்ளது.

3. நான் இவ்வழக்கில் வா.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்துள்ள விடுதலை பத்திரத்தில் எனது கணவராகிய பன்னீர் செல்வம் கையொப்பம் இடவில்லை என்றால் சரிதான். எனது கணவராகிய பன்னீர் செல்வம் முதலில் தான் திருமணம் செய்து கொண்ட பேச்சியம்மாளை சட்டப்படி விவாகரத்து செய்து கொள்ளாததால் எனக்கும் எனது கணவருக்கும் ஏற்பட்ட திருமணமானது செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் எனது கணவராகிய பன்னீர் செல்வத்தின் Service register ல் அவரது nominee ஆக குறிப்பிடப்பட்டுள்ள பேச்சியம்மாள் என்பவரும் மகேஸ்வரி என்பவரும் ஒரே நபர் தான் என்றும் மேற்படி நபர் நான் தான் என்றும் அதனால் மேற்கண்ட service register ல் பேச்சியம்மாள் என இடம் பெற்றுள்ள nominee பெயரை மாற்றி தருமாறு இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியரிடம் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல, நான் மாவட்ட ஆட்சியர் அலுவலத்தில் புகார் எழுத்தர் மூலம் எழுதப்பட்ட புகாரை கொடுத்தேன். மேற்படி புகார் எழுத்தர் அப்புகாரில் தவறான விவரங்களை குறிப்பிட்டுவிட்டார் எனது கணவரின் Service register ல் எனது புகைப்படம் தான் இடம் பெற்றுள்ளது.

4. நான் 22.10.2022ம் ஆண்டு 1ம் பிரதிவாதியிடம் மேற்படி விவரம் தொடர்பாக புகார் கொடுத்தேனா என்றால் இல்லை, நான் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியரிடம் மட்டும் தான் புகார் கொடுத்தேன். நான் 1ம் பிரதிவாதியிடம் புகார் மனு கொடுத்தேன் என்றும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் 1ம்பிரதிவாதிக்கு கொடுத்த புகாரின் பெயரில் 1ம்பிரதிவாதி 23.01.2023ம் தேதி எனக்கு ஒரு குறிப்பாணை அனுப்பினார் என்றும் அக்குறிப்பாணையில் நானும் எனது கணவரின் Service register ல் குறிப்பிடப்பட்டுள்ள பேச்சியம்மாள் எனும் நபரும் ஒரே நபர் தான் என நிரூபிக்கும் விதமாக ஆவணம் ஏதும் இல்லாததால் என்னுடைய புகாரில் கோரி உள்ள பரிகாரம் நிராகரிக்க பட்டதாக குறிப்பிட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள பிராது மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் எனது கணவரின் முதல் மனைவி பெயர் பேச்சியம்மாள் என்றும் நான் 2வதாக திருமணம் செய்யப்பட்டவர் எனவும் குறிப்பிட்டு சொல்லி விட்டு இராமநாதபுரம் மாவட்டஆட்சியர் மற்றும் 1 பிரதிவாதியிடம் அளித்த புகார் மனுவில் மேற்படி பேச்சியம்மாளும் நானும் ஒரே நபர் தான் எனக் கூறியிருப்பது முன்னுப்பின் முரணாக இவ்வழக்கை தாக்கல்

செய்திருப்பது சட்டப்படி செல்லக்கூடியதில்லை என்றால் சரியல்ல.

5. நான் எனது கணவரை திருமணம் செய்த போது மேற்படி பேச்சியம்மாள் உயிருடன் இருந்தாரா என்றால் உயிருடன் தான் இருந்தார் காளிமுத்து என்னும் நபரை 2வதாக திருமணம் செய்து கொண்டார். ஆனால் எங்கு இருந்தார் என்ற விவரங்கள் எங்களுக்கு தெரியாது. நான் பன்னீர் செல்வத்தினுடைய சட்டப்பூர்வமான மனைவி இல்லை என்பதால் இந்த வழக்கை தாக்கல் செய்ய எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. நான் பன்னீர் செல்வத்தின் உடைய சட்டப்பூர்வமான மனைவியாக இருந்திருந்தால் அவர் உயிருடன் இருந்த காலத்திலேயே அவருடைய service register ல் nominee பெயரில் திருத்தம் செய்திருப்பார் என்றும் நான் வழக்கிறக்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய கணவரது service register ல் என்னுடைய புகைப்படம் தான் இடம் பெற்றுள்ளது. பொதுவாக இறந்து போன நபருடைய service regsiter ல் எவ்வித திருத்தமும் செய்யவேண்டுமென்றாலும் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் நீதிபேராணை மனு தான் தாக்கல் செய்யப்படவேண்டும் என்றும் உரிமையியல் நீதிமன்றத்திற்கு திருத்தம் செய்ய உத்தரவிட அதிகாரம் இல்லை என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. நான் பிராதில் 1 முதல் 4 பிரதிவாதிகள் எனது கணவராகிய பன்னீர் செல்வத்தின் வாரிசுகளுக்கு பணபலன்களை வழங்கும் படி செயலுறுத்துக்கட்டளை பிறப்பிக்குமாறு வேண்டி உள்ளேன். ஆனால் பணபலன் மொத்த தொகையினை நான் குறிப்பிட்டு பிராதில் சொல்லவில்லை என்றால் எனக்கு தர வேண்டிய பணபலனின் மொத்த தொகை சரியாக தெரியாது அதனால் குறிப்பிட்டு சொல்லவில்லை. நிதி அதிகார எல்லை வரம்பின் படி நான் மொத்த தொகையை குறிப்பிட்டு சொல்லாததால் இவ்வழக்கானது நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலாது என்றால் சரியல்ல. வழக்கானது தள்ளுபடி செய்யவேண்டியது என்றும் நான் கோரும் பரிகாரங்கள் கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

(ஓம்/திரு.J.அந்தோணி ரிஷான்தேவ்)

மாவட்ட உரிமையியல் நீதிபதி

திருவாடானை